
# நற்கருணை வீரன்

இதழ் 53 செப்டம்பர் 2006 எண் 9



ஏரிக்குள் மூழ்கிவிடுமோ!

ஒரு குடும்பம் சொந்தக் காரில் சுற்றுலாவுக்குப் புறப்பட்டது. தந்தை காரை ஓட்டிச் சென்றார். மலைகளுக்கிடையே சென்ற கார் இரண்டுமணி நேரத்திற்குப்பின் ஓர் ஏரிக்கு அருகே வந்ததும் தந்தை காரை நிறுத்திவிட்டுக் கீழே இறங்கினார். தங்குவதற்கு ஒரு நல்ல இடத்தைத் தேடிப்பார்த்து வருவதாகச் சொல்லிவிட்டு கால் நடையாகச் சென்றார். பிள்ளைகள் காரிலேயே உட்கார்ந்திருந்தனர். தாய் கீழே இறங்கி காருக்கு அருகில் நின்றுகொண்டிருந்தாள்.

திடீரென கார் பின்நோக்கி நகர்வதைத் தாய் கவனித்தாள். அவள் உடனே காரின் முன்பக்கமுள்ள 'பம்பரை' இறுகப்பிடித்து கார் நகராமலிருக்கச் செய்ய முயன்றாள். ஆனால் கார் அதிகப் பழுவாயிருந்ததால், அவளால் அது சாத்தியப்படவில்லை. மேலும் கார் தன்னையும் சேர்த்து இழுப்பதாக உணர்ந்தாள். கார் நகர்ந்துகொண்டேயிருந்தது. சாலையின் ஓரத்தை நெருங்கிவிட்டது. அதனை ஒட்டி ஆழமான ஏரி ஒன்று இருந்தது. எனவே தாய் "இறைவா, என் பிள்ளைகளைக் காப்பாற்றும்' என்று கத்தினாள். கார் சாலையின் ஓரத்தையும் கடந்துவிட்டது. ஏரியை நோக்கி கார் வேகமாய் நகர்ந்துகொண்டிருந்தது. இன்னும் சிறிது நேரத்தில் கார் பிள்ளைகளுடன் மூழ்கிவிடக்கூடும்.

தாய் காரை விட்டுவிட்டு ஒதுங்கிவிட்டாளா? இல்லை. 'பம்பரை' இறுகப்பிடித்துக்கொண்டே 'என் பிள்ளைகள் மூழ்க நேரிட்டால், நானும் அவர்களோடு சேர்ந்து மூழ்கி விடுவேன்" என்று தனக்குள்ளே சொல்லிக் கொண்டாள். அவளுடைய முயற்சி வீணாயிற்று. காரோடு அவளும் சேர்ந்து ஏரியை நோக்கி இழுத்துச் செல்லப்பட்டாள்.

திடீரென்று பலத்த சப்தம் கேட்டது. ஏரியின் ஓரத்தில் இருந்த அடி மரத்தின் மீது கார் மோதிய சப்தம் அது. நல்ல வேளையாக கார் ஏரிக்குள் விழாமல் அந்த அடிமரத்தால் தடுத்து நிறுத்தப்பட்டது. தாய் எடுத்துக்கொண்ட சிரமத்தை பிள்ளைகள் எப்படி மறக்க முடியும்? வழி நெடுகிலும் பம்பரை இறுகப்பற்றிக் கொண்டே, காரை நிறுத்த முயன்ற தாய் அல்லவா? தேவைப்பட்டால், பிள்ளைகளோடு சேர்ந்து அவளும் தன் உயிரைத் தியாகம் செய்யத் தயாராயிருந்தாள் அல்லவா!

தம்பி தங்கையரே! உங்கள் அன்னையும் அத்தகைய தியாகத்தைச் செய்ய முன்வருவார்களா என்று நீங்கள் எப்பொழுதாவது நினைத்ததுண்டா? நிச்சயம் முன்வருவார்கள். தாயின் அன்புக்கு அளவே இல்லை. இப்பொழுது நீங்கள் உங்கள் அன்னையின் மட்டில் சிறிதளவு அன்பேனும் ஏன் காண்பிக்கக்கூடாது.

## காதுகேளாத பையனும் மருத்துவரும்



பீட்டர் என்னும் 12 வயதுச் சிறுவன் ஒருவன் பள்ளிக்குச் செல்ல மறுத்தான். பள்ளிக்குச் செல்வதை எவ்வளவு தூரம் விரும்பவில்லையெனில் காது கேளாதவன் போல் நடிக்கத் தொடங்கினான். அவனுக்கு காது கேட்காது என்று பிறரை நம்ப வைத்தான். அதனை மிகவும் உண்மை எனத் தோன்றச் செய்யும் வகையில் "அப்பா ஆசிரியர் ஒரு காதில் ஓங்கி அறைந்தார். எனவே இரு காதுகளுமே மோசமாகி விட்டன" என்று தன் தந்தையிடம் கூறினான்.


தந்தை பீட்டரை மருத்துவரிடம் அழைத்துச் சென்றார். மருத்தவர் பலவித ஒலிகளையும் கொண்டு பரிசோதித்தார். எதுவுமே கேட்கவில்லை என்று பீட்டர் சாதித்தான். இறுதியாக, பிரகாசமான விளக்கைக் கொண்டு காதுகளை உற்றுப் பார்த்தார். அவருக்குச் சந்தேகம் ஏற்பட்டது. "காது முழுவதும் பாழடைந்துவிட்டதுபோல் தோன்றுகிறது. ஆனால் உட்பகுதியை சரிவரப் பார்க்க முடியவில்லை. ஒரு கத்தியைக் கொண்டுவாருங்கள். காதையே வெட்டி எடுப்போம்" என்று தன் உதவியாளரிடம் மெல்லிய குரலில் சொன்னார்.

மருத்துவர் இவ்வார்த்தைகளைக் கூறியதும், பீட்டர் மின்னல் வேகத்தில் குதித்தெழுந்து, மருத்துவ மனையிலிருந்து ஓட்டம் பிடித்தான். மருத்துவர் காதை வெட்டிவிட்டது போல் அலறிக்கொண்டே ஓடினான். இந்த வியத்தகு சிகிச்சைக்காக, மருத்துவருக்குத் தக்க சன்மானம் அளித்தார் தந்தை.

பல குழந்தைகள் கோயிலில், வீட்டில், பள்ளியில் காதுகேளாதவர்போல் இருக்கிறார்கள். எவ்வளவு நல்ல அறிவுரைகள் கூறினாலும் அதைப்பொருட்படுத்துவதில்லை. தம்பி தங்கையரே! நீங்களாவது இவ்வித செவிட்டுத் தன்மைகளுக்குப் பலியாகாதீர்கள். குருக்கள், பெற்றோர், ஆசிரியர்கள் கூறும் அறிவுரைகளுக்குச் செவிமடுத்து, அவற்றின்படி நடங்கள்.

## கைப்பாஸின் விசாரணை

கெத்சமனியில் நம் ஆண்டவர் இயேசுவைக் கைது செய்தவர்கள் அவரைக் கைப்பாஸ் என்பவரிடம் இழுத்துச் சென்றனர். அந்த ஆண்டு அவர் தலைமைக் குருவாக இருந்தார். அவர் நம் ஆண்டவரை விசாரித்தார். அவரைக் கொலை செய்துவிடுவது என்று முன்னரே முடிவு செய்துவிட்டார்கள். அதற்காக அவர் மீது ஏதாவது குற்றம் சுமத்த வேண்டும். அதற்காகவும் ஏற்பாடு செய்திருந்தனர். அவர்கள் பல குற்றங்களைச்



சுமத்தினர். நம் ஆண்டவர் எதற்குமே பதில் ஒன்றும் சொல்லவில்லை. தலைமைக் குரு வியப்படைந்தார். வியப்படைந்தவர் நம் ஆண்டவரை நோக்கி "உயிருள்ள கடவுளின் பெயரால் ஆணையிட்டுச் சொல்லுமாறு உன்னைக் கேட்கிறேன்: நீ கடவுளின் மகனான மெசியாவோ?" என்று கேட்டார்.


இயேசு "நீரே சொன்னீர். மேலும் மானிட மகன் வல்லமை உள்ள இறைவனின் வலப்பக்கத்தில் அமர்ந்து வான மேகங்கள் மீது வருவதை இனிக் காண்பீர்கள்" என்றார். இதன் மூலம் தாம் இறை மகன் என்பதைத் தெளிவாக்கினார். உடனே தம் ஆடைகளைக் கிழித்துக்கொண்டு 'இவன் இறைவனைப் பழித்துரைத்தான்; இவன் மரணத் தண்டனை பெற வேண்டியவன்' என்று தீர்ப்பு வழங்கினார்.

நீ பிறரைப் பழி வாங்கும் நோக்கத்துடன் அநியாயமாக அவர்கள் மீது பழி சுமத்துவது உண்டா? அது தவறல்லவா?

(தொடரும்)

# அடிமை பாஸ்கர்

## "விடாதே, விடாதே" (12)



ரோடாவின் குதிரை லாயம் பாஸ்கருக்கு நன்றாகத் தெரியும். எனவே பாஸ்கர் நேராக அங்கே ஓடி ஒரு நல்ல குதிரையில் ஏறிக்கொண்டு ஓட்டம் பிடித்தான். தூரத்திலிருந்து இதைப் பார்த்த ரோடா சில அடிமை களை குதிரைகளில் ஏற்றிக்கொண்டு பாஸ்கரைப் பிடிக்க விரைந்தான். பாஸ்கரின் குதிரை சிட்டாய்ப் பறந்தது. எனினும் ரோடாவின் குதிரை எவ் விதத்திலும் அதற்குக் குறைந்ததல்ல. அடிமைகளின் குதிரைகளும் நிற்காமல் ஓடின. சிறிது நேரத்தில் ரோடாவின் அடிமைகள் பாஸ்கரை நெருங்கி விட்டார்கள். "விடாதே, விடாதே! சுடு, சுடு!" என்று அவர்கள் போட்ட சப்தம் பாஸ்கரின் காதில் தெளிவாய் விழுந்தது. அத்தோடு அடிமைகள் சுட்ட துப்பாக்கிக் குண்டுகளும் பாஸ்கரின் பக்கத்தில் இரைச்சலுடன் சென்றன. இன்னும் சில நிமிடங்களில் பாஸ்கர் பிடிபட்டுவிடுவான் போல் இருந்தது.

பாஸ்கர் யோசித்தான். திடீரென அவனுக்கு ஒரு யோசனை உதித்தது. கத்தியை எடுத்துத் தன் குதிரையின் கழுத்தில் ஓங்கிக் குத்தினான். குதிரை கனைத்துக்கொண்டு மின்னல் வேகத்தில் சென்றது. ரோடாவின் குதிரையால் பாஸ்கரின் குதிரையைத் தொடர முடியவில்லை. பாஸ்கரின் குதிரை அடர்த்தியான காட்டுக்குள் வந்தது, உடனே பாஸ்கர் குதிரையில் இருந்து கீழே குதித்து காட்டுக்குள் ஓடி மறைந்தான். அவனுடைய குதிரை மட்டும் வலி தாங்க முடியாமல் ஓடிக் கொண்டே இருந்தது. சிறிது நேரத்தில் ரோடாவும் அவனது அடிமைகளும் அந்தப் பக்கமாய் வந்தார்கள். ஆனால் பாஸ்கர் அங்கு ஒளிந்து கொண்டான் என்பது அவர்களுக்குத் தெரியாது.



(தொடரும்)

## புனிதர் மரிய வியான்னி



73 ஞாயிறு மறையுரை அவருக்குப் பெரும் பாரம். எல்லா வேலைகளுக்கு நடுவிலும் கோவிலுக்கு வருபவர்களுக்கு என்ன மறையுரை ஆற்றுவது என்ற சிந்தனையே மேலோங்கி இருக்கும். பல ஞான நூல்களை வாங்கிக் கோயிலில் வைத்திருந்தார். வாரம் முழுவதும் அந்த மறையுரைக்குத் தயாரிப்பு இருக்கும். முதலில் செபிப்பார். பிறகு வாசிப்பார். நீண்ட நேரம் மறையுரை தயாரிப்பார். நாளொன்றுக்கு ஏழெட்டு மணி நேரம் கூட அந்த வேலையில் ஈடுபட்டிருப்பார். வார முடிவில் மறையுரை தயாராகி இருக்கும்!

74 மறையுரை எழுதியாயிற்று. அதை மனப்பாடம் செய்து, சொற்பொழிவு ஆற்ற வேண்டும்! சனிக்கிழமை இரவுகளில் அவர் அந்த மறையுரையைச் சத்தமாகச் சொல்லிப் பழகுவார். பல பக்கங்கள் அடங்கிய அந்த மறையுரையை மனனம் செய்வது சற்றுக் கடினமாக இருக்கும். சில லத்தீன் வார்த்தைகள் நினைவில் நிற்காமல் திமிரும். அதைச் சொல்வதற்குள் திணறி விடுவார். ‘இனிமேல் முடியாது’ என்னும்போது எதிலாவது சாய்ந்து சிறிது உறங்குவார். பிறகு கண் விழித்து மீண்டும் அதைச் சொல்லிப் பழகுவார்!



75 இறுதியாக அவர் போதகப் பீடத்தில் நிற்கும்போது சொற்களும் தொடர்களும் மறந்து விடும். ஆயினும் மனந் தளர மாட்டார். விண்ணகத்தைப் பற்றி, கடவுளின் அன்பைப் பற்றி போதிப்பது அவருக்கு மிகப் பிடிக்கும். விண்ணகம் செல்ல நாம் எடுக்க வேண்டிய முயற்சிகள் பற்றி எடுத்துரைத்து அங்கே அனைவரும் போய்ச் சேர்ந்து விட வேண்டும் என்று போதிப்பார். "ஓ இவர்கள் காதில் நான் சொல்வது நுழைவதில்லை; ஆனால் நான் செபிக்கும் போது ஆண்டவர் கேட்கிறார். அவர் கேளாமல் இருப்பதில்லை" என்கிறார்!



76 இறையன்பு அற்றவர்களாக, கோவிலுக்குச் செல்வதை விரும்பாதவர்களாக ஆர்ஸ் மக்கள் வாழ வேறு பல சோதனைகள் இருந்தன. 200 பேர் வாழ்ந்த ஊரில் நான்கு சாராய விடுதிகள் இருந்தன. மக்கள் ஞாயிற்றுக் கிழமையில் வேலை முடிந்ததும் அழகாக உடுத்தி, விடுதிக்குச் சென்று குடிப்பதிலும், விளையாடுவதிலும் நேரத்தை வீணடித்தனர். "சாராய விடுதி பல குடும்பங்களின் வாழ்வை நாசமாக்குகிறது, உடல் நலத்தைச் சீரழிக்கிறது, சண்டை சச்சரவுகளின் பிறப்பிடம் ஆகிறது" என்று பங்குத் தந்தை உணர்ந்தார்.



(தொடரும்)

Edited & Published by Rev.Fr.M.S.Savariraj, S.J., and Printed at
St.Mary's Press, Beschi College, P.B.No.90, Dindigul - 624 001, Tamil Nadu
Price: 50 p only. 26th of every month ✆ (0451) 2432188
*Regd. with RNI No.1316 / 57*
REGISTERED TN / SR / DDL - 225 / 2006 - 2008
Licensed to Post without Prepayment - TN/WPP - 62/SR/2006 - 2008



## தன் சகோதரனைக் கொன்றான்

விவிலியத்தில் காயின், ஆபேல் சகோதரர்களைப்பற்றிப் படித்திருக்கிறோம். அவர்கள் இருவரும் கடவுளுக்குக் காணிக்கை செலுத்தினர். கடவுள் ஆபேலின் காணிக்கையை ஏற்றுக் கொண்டார். ஏனென்றால், அவன் மிகவும் நல்லவன். ஆனால் காயினோ கெட்டவன். எனவே கடவுள் அவனது காணிக்கையை ஏற்கவில்லை. காயின் ஆபேல் மீது பொறாமை கொண்டு அவனைக் கொலை செய்தான். கடவுள் காயினிடம், "உன் தம்பியின் இரத்தக்குரல் பூமியிலிருந்து என்னை நோக்கி கூக்குரலிடுகிறதே, எனவே, நீ பூமியில் சபிக்கப்பட்டவனாய் இருப்பாய் என்றார்.

பத்து கட்டளைகளில் ஐந்தாவது கட்டளை, கொலை செய்வதையும், கொலை செய்ய இட்டுச் செல்லும் சண்டை, சச்சரவு, கோபம் போன்றவற்றைத் தவிர்ப்பதும் என்பதே. யாராவது உன்னை அடித்தால் நீ திருப்பி அடிக்காமல் மனப்பூர்வமாக மன்னித்துவிடு. உன் மனம் வருந்தும்படி யாரேனும் பேசினாலும் நீ அன்புடன் பேசு. அனைவருடனும் சமாதானமாய் இரு. கடவுளுக்கு மிக்க மகிழ்ச்சிதரும் இவற்றைக் கடைப்பிடித்தால் நீ அவரின் உண்மையான பிள்ளை. – இயேசுவின் வார்த்தைகளை நினைவில் வை:

**சாந்தமுள்ளோர் பேறுபெற்றோர்! இரக்கமுடையோர் பேறுபெற்றோர்!**
**சமாதானம் செய்வோர் பேறுபெற்றோர்!**